இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித் துளி மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(அனைவரும் ஒரு மணித் துளி மவுனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம்

*3697—திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி எத்தனை வழக்குகள் பதிவாகியுள்ளன?

(ஆ) எத்தனை பேர் தண்டிக்கப்பட்டனர்?

(இ) சிறையில் அடைக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1977-ஆம் ஆண்டு முதல் 1988-ஆம் ஆண்டு வரை 13,682 வழக்குகள் பதிவாகியுள்ளன.

(ஆ) தண்டிக்கப்பட்டவர்கள்—566.

(இ) சிறையில் அடைக்கப்பட்டவர்கள்—381.

வேலைவாய்ப்பில் முன்னுரிமை.

*5538ஏ—திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மருத்துவத் தகுதியின் அடிப்படையில் ஒய்வுபெறுபவர்களின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மருத்துவத்தகுதியின் அடிப்படையில் ஒய்வு பெறுபவர்களின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கும் செயற் குறிப்பு ஏதும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை. ஆனால் 50 வயதிற்குள் மருத்துவத் தகுதியின் அடிப்படையில் ஒய்வு பெறும் அரசு அலுவலர்களின் வாரிசுகளுக்கு (ஒருவருக்கு), வேலைவாய்ப்பு அலுவலகத்தை நாடாமலேயே நேரடியாகப் பணி நியமனம் செய்யலாம் என்ற சலுகை ஒன்று நடப்பிலுள்ளது.